நீரை இராசிபுரம் நகராட்சிக்கு விநியோகம் செய்ய தனியாக பைப் லைன் அமைக்கவும், இராசிபுரம் நகராட்சியில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க வட்டச் சாலை அமைக்கவும், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தை விரைவாகக் கட்டவும், இராசிபுரத்திலிருந்து நாமக்கல்லிற்கும் சேலத்திற்கும் கூடுதலாகப் பேருந்து மற்றும் தொடர் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தரவும், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் வாச்சுக்கல்–பாலாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டவும், ஆயில்பட்டி மங்களபுரம் காவல் நிலையத்தை உள்ளடக்கி, தனியாக ஒரு காவல் துறை ஆய்வாளர் அலுவலகமும், முள்ளுக்குறிச்சியில் ஒரு காவல் நிலையம் அமைத்துத் தருமாறும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் அன்று. ஏழைகள் அனைவரும் இறைவனாகக் காண்கின்றனர் கலைஞரை இன்று. *(மேசையைத் தட்டும் ஒலி)* கடந்த கால ஆட்சி "டூப்பு"; கலைஞருடைய ஆட்சிதான் இன்று "டாப்பு" என்று கூறி இந்தத் துறையின் மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2. தகவல் கோரல்–தொடர்ச்சி

(இ) தனியார் பள்ளிகளில் வசூலிக்கும் கட்டணம் குறித்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையிலே நான் கல்விக் கட்டணம் குறித்து (குறுக்கீடு) மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகிகளெல்லாம் கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் அரசுக்கு இல்லையென்று கூறி, உச்ச நீதிமன்றம் போவோம் என்று சொல்லி, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்ற ஒரு தகவல் வந்தது. இன்று அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணை முடிந்து ஓர் உத்தரவு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது குறித்து என்ன தகவல் வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு ஓர் இனிப்பான செய்தியினை நான் தெரிவிக்க விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத்திலே தனியார் மெட்ரிகுலேஷன் சுயநிதிப் பள்ளிகள் தொடுத்த வழக்கை, நீதியரசர் திரு. சதாசிவம் அவர்கள் தலைமையிலான பென்ச் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது. விசாரணை நிலையிலேயே அவர்கள் தொடுத்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் நிலை, அரசின் சட்டம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், நீதியரசர் தன்னுடையத் தீர்ப்பில், இந்தியாவிலேயே மிக முக்கியமான, ஓர் அற்புதமானச் சட்டத்தை நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கிறதென்றும், இந்தச் சட்டம் முறையான வகையிலே உருவாக்கப்பட்டிருக்கிறது, பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கிறதென்றும், இந்தச் சட்டத்தை கொண்டு வரக்கூடிய தமிழக அரசை பாராட்டும் விதமாக, அங்கே கருத்துகளைச் சொல்லியிருப்பதாகவும் நம்முடைய வழக்கறிஞர்கள் புதுடெல்லியிலிருந்து தகவல் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 29 - சுற்றுலா–கலை பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 11 - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(இ) கோரிக்கை எண் 28 - செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

(ஈ) கோரிக்கை எண் 30 - எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுந்தரம். (குறுக்கீடு) கொறடா பேசுகிறீர்களா? சரி, பேசுங்கள்.